OS: 509/2018

Date: 27.03.2026

பெயர் : சந்திரசேகரன் **(பி.வா.சா.2) ஆஜர், சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்**.

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி :–</u>**

1. புதுத்தெரு ரோட்டில் இருந்து ஓமலூா் பேருந்துநிலையம் வரை ஒரு 30 அடி அகல மனைபிரிவு ரோடு ஓ.கே.ஏகாம்பரம் அவர்களால் விடப்பட்டு அதில் தங்கம் தியேட்டர், கந்தசாமி திருமண மண்டபம் ஆகியவைகள் உள்ளது என்றால் 30 அடி ரோடு இருக்கிறது. ஆனால் தார் போடவில்லை. தங்கம் தியேட்டர் மற்றும் கந்தசாமி மண்டபம் அந்த சாலையில் இருக்கிறது. அந்த சாலையை ஓ.கே.ஏகாம்பரம் விட்டாரா என்பது எனக்கு தெரியவில்லை. எங்கள் கட்டிடத்தில் இருந்து 30 அடி ரோடு 100, 150 அடி தள்ளியிருக்கிறது. நான் ஓமலூருக்கு வந்து 49 வருடங்கள் ஆகிறது. நான் வந்தபோது அந்த 30 அடி ரோடு இல்லை. கடந்த 20 வருடங்களுக்கு முன்னர் தான் அந்த ரோடு போடப்பட்டிருக்கிறது.

2. 29.11.1990ம் தேதியன்று ஓ.கே.ஏகாம்பரத்திடமிருந்து எனது நிலத்திற்கு பின்புறம் 660 சதுரடி கிரயம் பெற்றதற்கான ஆவணம் தான் நான் தாக்கல் செய்திருக்கும் பி.வா.சா.ஆ.15 என்றால் ஆமாம். மேற்படி பி.வா.சா.ஆ.15 ஆவணத்தில் செக்குபந்தியாக பஞ்சாயத்து போர்ட் சந்து வழிக்கும் வடக்கு என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது என்றால் ஆமாம். அந்த பஞ்சாயத்து ரோட்டை ஓ.கே.ஏகாம்பரம் தான் விட்டார் என்றால் ஆமாம். ஆனால், அது பஞ்சாயத்து போர்ட் ரோடா என்று எனக்கு தெரியாது. ஆனால் அந்த ரோட்டை ஓ.கே.ஏகாம்பரம் தான் விட்டார்.

3. அந்த ரோடு புதுத்தெரு ரோட்டில் இருந்து ஓமலூர் பேருந்து நிலையம் செல்லும் 30 அடி ரோட்டின் கிழபுறமாக இணைகிறது என்றால் இல்லை. ஆரம்பத்தில் நான் கிரயம் பெற்ற போது எனது நிலத்திற்கு பின்புறமாக லிங்கம்மாள் பட்டா நிலம் இருந்தது. அவர் வரப்பு போட்டிருந்தார் அதில் யாரும் செல்லமுடியாது. பின்னர் தான் ஓ.கே.ஏகாம்பரம் லிங்கம்மாள் பரம்பரையினரிடமிருந்து வாங்கி ரோடு போட்டார். அதில் நான் கொஞ்சம் வாங்கினேன். அந்த ரோடு இருக்கிறது என்றால் ஆமாம்.

4. அந்த ரோடு வழியாக புதுத்தெருவிற்கும் செல்லலாம் என்றாலும், ஓமலூர் பேருந்து நிலையத்திற்கும் செல்லலாம் என்றாலும் ஆமாம். ஆனால் நாங்கள் அதில் செல்வதில்லை. தர்மபுரி மெயின்ரோட்டின் வழியாகதான் செல்கிறேன். எனது மருத்துவமனையில் இருந்து தர்மபுரி மெயின்ரோடு வழியாக ஓமலூர் பேருந்து நிலையம்

செல்ல எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 200 அடி இருக்கும். 09.03.1979ல் கோவிந்தசாமி வகையறாவிடமிருந்து கிரயம் பெற்ற நிலத்தை பி.வா.சா.ஆ.14 ஆவணமாக தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் ஆமாம்.

5. அந்த கிரய பத்திரத்தில் வடபுறம் பெரியதம்பி ஆச்சாரி பாக வீடு இருக்கிறது என்றால் ஆமாம். அந்த பெரியதம்பி ஆச்சாரி பாக வீட்டை நான் 17.03.1979ம் தேதி கிரயம் வாங்கினேன் என்றால் ஆமாம். தற்போது என்னிடம் காட்டப்படும் கிரயப்பத்திரம் தான் என்றால் ஆமாம். அது **வா.சா.ஆ.23** ஆக குறியீடு செய்யப்படுகிறது. வா.சா.ஆ.23 பத்திரத்தில் சொல்லியிருக்கும் செக்குபந்தி சரியானதா என்றால் அதனை பார்த்துவிட்டுதுதான் சொல்லமுடியும். தர்மபுரி மெயின் ரோட்டிற்கும் கிழக்கு என்றால் சரிதான். ஓமலூர் சௌடேஸ்வரி அம்மன் கோவிலுக்கு பாத்தியப்பட்ட புஞ்சை நிலத்தில் கிழமேலாக சென்று கொண்டிருக்கும் வழி நடைரோட்டிக்கும் தெற்கு என்றால் அவ்வாறு தான் அதில் எழுதப்பட்டிருக்கிறது அந்த பத்திரத்தை ஆவண எழுத்தர் எழுதும் போது 1934ம் ஆண்டிலேயே யூனியன் கக்கூஸ் சந்துக்கும் பொது கிணற்றிர்க்கும் தெற்கு என்று உள்ள நிலையில் எதற்காக நடைபாதை ரோடு என்று எழுதிகிறீர்கள் என்று கேட்டேன், அதற்கு பத்திர எழுத்தர் தற்போது அந்த கக்கூஸ் இல்லை என்பதாலும், கிணறு மட்டுமே இருப்பதாலும், வழிநடை பாதைக்கும் தெற்கு என்று எழுதியதாக சொன்னார் அது ஏற்கும்படியாக இருந்ததால் அவ்வாறு எழுதப்பட்டது.

6. பெரியதம்பி ஆச்சாரி வீட்டிற்கு வடபுறமாக தான் தாவா சொத்து இருக்கிறது என்றால் ஆமாம், சர்வே எண்.81/1N ஆகும். பிரதிவாதிகள் அனைவரும் வாதி கோவில் தர்மகர்த்தாக்கள் மீது ஓமலூர் உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண்.252/2007 வழக்கை 28.09.2007ம் தேதியில் தாக்கல் செய்திருந்தோம் என்றால் ஆமாம். அ.வ.எண்.252/2007 வழக்கில்குறிப்பிட்டுள்ள சொத்தும்இந்த வழக்கின் சொத்தும் ஒன்றே என்றால் ஆமாம். அ.வ.எண்.252/2007 வழக்கில் கோவில் உரிமையை நாங்கள் மறுத்ததால் தான் இந்த வழக்கை எங்கள் மீது வாதி கோவில் தர்மகர்த்தாக்கள் 14.11.2007 தேதியில் தாக்கல் செய்திருக்கிறார்கள் என்றால் ஆமாம்.

7. நாங்கள் தாக்கல் செய்திருந்த வழக்கில் வழக்கு சொத்தை ரோடு என்று சொன்னதால் தான் வாதி கோவிலுக்கு இந்த வழக்கை தாக்கல் செய்யவேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல, அது எப்போதுமே ரோடு தான். 1934ம்

ஆண்டில் இருந்தே அது ரோடு தான். 1934ம் ஆண்டிலேயே அதற்கு பத்திரம் இருக்கிறது. தற்போது 1979ம் ஆண்டு Blue print ம் எடுத்துவைத்திருக்கிறேன். நாங்கள் டி.எம்.சி நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்னர் வழக்கு சொத்து சம்பந்தமாக வழக்கு சொத்தின் பாத்திய உரிமை குறித்து ஆட்சேபனையோ, வழக்கறிஞர் அறிவிப்போ, வழக்குகளோ தாக்கல் செய்துள்ளோமா என்றால் அதற்கான தேவை ஏற்படவில்லை. அது ரோடாக தான் அனைவராலும் பயன்படுத்தப்பட்டு வந்தது. எனவே, ஆட்சேபனையோ, வழக்கோ தாக்கல் செய்யவில்லை.

8. இந்த வழக்கு காலவரையறைச் சட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்று எதன் அடிப்படையில் சொல்கிறேன் என்றால் 1979ம் ஆண்டில் இருந்தே நான் அனுபவத்தில் இருப்பதால் அது ரோடாகவும் பயன்படுத்தப்பட்டு வருவதால் இவ்வாறு சொல்லியிருக்கிறேன். அதனை நான் 50 ஆண்டுகளாக பயன்படுத்தி வருகிறேன். எனவே இவ்வாறு சொல்லியிருக்கிறேன். இவ்வாறு 50 ஆண்டுகளாக பயன்படுத்தி வருவதாக சொல்வதற்காக ஆவணம் ஏதாவது தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் அது ரோடாக இருப்பதால் தான் அதற்கு Blue print போட்டிருக்கிறேன் என்று சாட்சி கூறுகிறார்.

9. எனது முதல் விசாரணையின் 5வது பத்தியில் இந்த வழக்கு அவசிய தரப்பினரான ஓமலூர் பேரூராட்சியாக தரப்பினராக சேர்க்காததால் தள்ளுபடி செய்யதக்கது என்று சொல்லியிருக்கும் நிலையில் வழக்கு சொத்து சம்பந்தமாக நாங்கள் அனைவரும் தாக்கல் செய்த அ.வ.எண்.252/2007 என்ற வழக்கில் ஓமலூர் தேர்வுநிலை பேரூராட்சியை 6ம் பிரதிவாதியாக சேர்த்திருக்கிறோம் என்றால் ஆமாம். அந்த வழக்கில் ஓமலூர் தேர்வுநிலை பேரூராட்சி சார்பாக ஒரு வழக்கறிஞர் ஆஜராகி பதிலுரையில் தாக்கல் செய்திருக்கிறார் என்றால் எனக்கு அதுபற்றி தெரியவில்லை. வா.சா.ஆ.17 பேரூராட்சி சார்பாக தாக்கல் செய்யப்பட்டுள்ள பதிலுரை என்றாலும் அதன் 5வது பத்தியில் இந்த தாவா பாதை குறித்து இந்த பிரதிவாதி அலுவலகத்தில் எந்த ஒரு ஆவணங்களும் பேணப்படவும் இல்லை அதேபோல் எந்த ஒரு ஆவணமும் நடைமுறையில் இ்ல்லை. அதேபோல் எந்த ஒரு பாதையும் தாவாவில் சொல்லியுள்ளது போல் பேரூராட்சி கட்டுப்பாட்டிலோ அல்லது பேரூராட்சி மூலமோ பராமரிக்கபடுவதும் இல்லை, செயல்பாட்டிலும் இல்லை என்று குறிப்பிட்டு சொல்லப்பட்டிருக்கிறது

என்றால் அதுபற்றி எனக்கு தெரியவில்லை. ஆனால் அது 100 சதவீதம் தவறான சங்கதி ஆகும்.

10. அ.வ.எண்.252/2007 வழக்கு 6ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள பதிலுரையின் 6வது பாராவில் அந்த வழக்கின் சொத்து விவரத்தில் கண்டுள்ள சங்கதிகள் பொய்யானவை என்று குறிப்பிட்டு சொல்லியிருக்கிறார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. ஆனால் அது உண்மைதான். அங்கு கிணறு இருக்கிறது. டவுன் பஞ்சாயத்து சொல்லியிருக்கும் சங்கதிகள் பொய்யானது. மேற்படி டவுன் பஞ்சாயத்து சொல்லியிருக்கும் சங்கதிகள் பொய்யானது என்று எனது வழக்கின் பதில் உரையிலோ அல்லது அ.வ.எண்.252/2007 வழக்கிலோ குறிப்பிட்டு சொல்லியிருக்கிறேனா என்றால் அவர்கள் என்ன சொல்லியிருக்கிறார்கள் என்று எனக்கு தெரியவில்லை. எனவே அதுபற்றி சொல்ல முடியவில்லை. தெரிந்திருந்தால் சொல்லியிருப்பேன்.

11. அ.வ.எண்.252/2007 வழக்கு 6ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள பதிலுரையின் 6வது பாராவில் இந்த பிரதிவாதி வழக்கிற்கு தேவையில்லாத தரப்பினர் என்றும், வேண்டுமென்றே இந்த பிரதிவாதியை தாவாவில் சேர்த்து நீதிமன்றத்திற்கு இழுத்தடிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் வழக்கை தாக்கல் செய்துள்ளதாக சொல்லியிருக்கிறார்கள் என்றால் அவர்கள் என்ன சொல்லியிருக்கிறார்கள் என்று எனக்கு தெரியாது. எனவே பதில் சொல்ல இயலவில்லை. வழக்கு சொத்தில் ஓமலூர் தேர்வுநிலை பேரூராட்சிக்கு எந்த உரிமையும் இல்லை என்று அவர்களே அ.வ.எண்.252/2007 வழக்கில் ஒப்புக்கொண்டுள்ளதால் அவர்கள் இந்த வழக்கிற்கு தேவையில்லாத தரப்பினர் என்றால் சரியல்ல, அவர்கள் தேவையான தரப்பினர்தான். அவர்கள்தான் அந்த சாலையை போட்டார்கள். அங்கு கிணறு இப்போது வரை இருக்கிறது. அதற்கு வேறு வழியே இல்லை என்று சாட்சி கூறுகிறார். இப்போது வரை ஓமலூர் பேரூராட்சி தான் அதனை சுத்தப்படுத்தி வருகிறார்கள். நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

12. வாதி கோவில் தேவாங்க சமுகத்தில் உள்ளவர்களின் 5க்கும் அதிகமான அறங்காவலர்கள் நபர்களால் நிர்வகிக்கப்படவேண்டும் என்று HR & CE துறையில் Deputy commissioner உத்தரவு பிறப்பித்துள்ள விவரம் எனக்கு தெரியும் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அது எனக்கு தேவையில்லாத விசயம். இந்த வழக்கு ஆவணங்கள் அனைத்தும் எனது வழக்கறிஞருக்கு வழக்கு விசாரணைக்கு முன்பே

கொடுக்கப்பட்டிருப்பதால் இந்த விவரங்கள் அனைத்தும் எனக்கு நன்கு தெரியும் என்றாலும், நான் வேண்டுமென்றே பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

13. நாங்கள் தாக்கல் செய்த அ.வ.எண்.252/2007 வழக்கிலும், இந்த வழக்கிலும் ஒரே தரப்பினர்கள் என்றால் நாங்கள் ஒரே தரப்பினர் தான் எதிர்தரப்பினரைப் பற்றி எனக்கு தெரியாது. எனக்கு இரண்டு வழக்கின் தரப்பினர்களும் ஒருவரே என்பது தெரியும் என்றாலும் நான் வேண்டுமென்றே பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. 1998ம் ஆண்டு டிரஸ்டிஸ் மாறிவிட்டதாக கேள்விபட்டேன். முழுமையாக தெரியாது. 08.04.2014ம் தேதியில் நாங்கள் தாக்கல் செய்த அ.வ.எண்.252/2007 வழக்கு தள்ளுபடி ஆகிவிட்டது என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது. வா.சா.ஆ.18, 19 ஆவணங்களை வழக்கு விசாரணையின் போதே எனது வழக்கறிஞருக்கு கொடுக்கப்பட்டுவிட்டதுஎன்றாலும், எனவே எனக்கு அந்த விவரம் நன்கு தெரியும் என்றாலும், தற்போது வேண்டுமென்றே தெரியாது என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. எனது வழக்கறிஞர்கள் நடத்தி கொண்டிருப்பதாகதான் நினைத்துகொண்டிருந்தேன்.

14. இந்த வழக்கில் வாதிகள் தரப்பு சாட்சிகள் விசாரிக்கப்பட்டபோதும், எனது வழக்கறிஞர் வாதி தரப்பு சாட்சிகளை குறுக்கு விசாரணை செய்தபோதும், நான் நீதிமன்றத்திற்கு வந்திருக்கிறேன் என்றால் இல்லை. நான் மருத்துவராக இருப்பதால் ஓரிரு முறை மட்டுமே நீதிமன்றத்திற்கு வந்திருக்கிறேன். நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் ஒவ்வொரு வாய்தாவிற்கும் நாங்கள் 4, 5 பேர் நீதிமன்றத்திற்கு வந்துகொண்டிருக்கிறோம் என்றாலும் சரியல்ல. நான் மருத்துவர். ஓரிரு முறை மட்டுமே வந்திருக்கிறேன்.

15. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 ஆவணத்தில் சர்வே எண்.81/1N என்பது யார் பெயரில் இருக்கிறது என்றால் ராமலிங்க சௌடேஸ்வரி அம்மன் பெயரில் இருக்கிறது. சர்வே எண்.81/1Nல் எவ்வளவு விஸ்தீரணம் என்பது எனக்கு தெரியாது. எங்களிடம் இருக்கும் மூல பத்திரங்களில் கக்கூஸ் சந்து என்று இருக்கிறது. எனவே அப்படி இவ்வாறு இருக்கும் என்று சாட்சி கூறுகிறார். எங்களது பத்திரங்களில் வாசகங்கள் எங்களால் எழுதப்படுபவை என்பதால் தனிப்பட்ட பத்திரங்கள் வாதிகளின் உரிமையை பாதிக்காது என்றால் சரியல்ல. எங்களது பத்திரத்தில் நாங்கள் அவ்வாறு எழுதி

கொண்டதால் அது வாதி கோவிலின் உரிமையை பாதிக்காது என்றால் சரியல்ல. எங்கள் பத்திரப்படி நாங்கள் நடக்கிறோம். வா.சா.ஆ.4 பட்டாவில் சர்வே எண்.81/1N என்பது யார் பெயரில் இருக்கிறது என்றால் சௌடேஸ்வரி அம்மன் கோவில் பெயரில் தான் இருக்கிறது. ஆனால் எனக்கு நடைபாதை என்று தான் வந்திருக்கிறது.

**பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணையின் தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

(ஒப்பம்/–த.மாலதி),
சார்பு நீதிபதி,
ஓமலூர்.